| இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 1.30 மணி **XII - தமிழ்** | மதிப்பெண் : 50 |

## பகுதி - 1

*குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* **(8x1=8)**
*ii) ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.*

1. ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம் மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
அ) இரைச்சல்
ஆ) குறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர் தழும்பல் இல்
ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

2. திண்ணியர் என்பதன் பொருள்
அ) அறிவுடையார் ஆ) மன உறுதியுடையவர்
இ) தீக்காய்வார் ஈ) அறிவிலார்

3. ‘சாபவிமோசனம்’, ‘அகலிகை’ கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு.அழகிரிசாமி
ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயமோகன்
ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

4. யானை புக்க புலம் போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்குப் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

5. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்-இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து
இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

6. ‘இரட்டைக் காப்பியங்கள்’ என அழைக்கப்படுவது
அ) சிலப்பதிகாரம், மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம், வளையாபதி
இ) சீவகசிந்தாமணி, மணிமேகலை ஈ) வளையாபதி, குண்டலகேசி

7. ‘ஆதன்’ என்ற சொல் எந்த அரசவம்சத்தைக் குறிப்பது
அ) சேரர் ஆ) சோழர்
இ) பாண்டியர் ஈ) பல்லவர்

8. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்த கால துயரங்களை
ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை
ஈ) அனைத்தையும்

## பகுதி - 2

*குறிப்பு: எவையேனும் ஆறனுக்கு குறுகிய விடையளிக்க.* **(6x2=12)**

9. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

10. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

11. ஒரு முக எழினி, பொருமுக எழினி - குறிப்பு வரைக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. பாவிகம் - விளக்குக.

13. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இருதொடர்களை எழுதுக.

14. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

15. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

பகுதி - 3

*குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.* *(3x4=12)*

16. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

17. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பவனவற்றை எழுதுக.

18. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

19. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

20. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

21. புகளூர்க் கல்வெட்டு குறித்து ஐராவதம் மகாதேவன் கூறுவன யாவை?

பகுதி - 4

*குறிப்பு: எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.* *(1x6=6)*

22. மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

*(அல்லது)*

எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. நிறுவுக.

பகுதி - 5

*குறிப்பு: மொழிப்பயிற்சி வினாக்கள்.* *(4x2=8)*

23. *ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.*
அ) தொழுதனர்
ஆ) அறிந்து

24. *ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.*
அ) தலைக்கோல்
ஆ) பெருந்தேர்

25. *கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் அமைக்க.*
குதிரை, வேகம், ஓடு, தாவு

26. *தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.*
வனவிலங்கு காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

பகுதி - 6

*குறிப்பு: அடிபிறழாமல் எழுதுக.* *(1x4=4)*

27. "குழல் வழி நின்றது யாழே" - எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com